



# இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்

— சகோதரி. நிஜா கென்னடி

*ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் ; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.*

*- மத்தேயு 7 : 12*

மற்றவர்கள் நமக்கு எதைச் செய்ய வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அதையே மற்றவர்களுக்கு நாம் செய்ய வேண்டும் என்று இயேசு கிறிஸ்து மிகத் தெளிவாகக் கூறுகிறார். இதை மிக முக்கியமாக சட்டமாக நேரிடையாக ஜனங்களிடம் சொல்லுகிறார். மற்றவர்களையும் நம்மைப்போல நேசித்தால்தான் நாம் இப்படியாக நடந்து கொள்ள முடியும். அன்றாட வாழ்க்கையில் அன்பு நம்மிடமிருந்து வெளிப்பட நம் தேவன் விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவின் அன்பு நமக்குள் இல்லையென்றால் நாம் மற்றவர்களையும் நம்மைப்போல நேசிக்க முடியாது. மற்றவர்களுக்கு அன்பு இல்லாமல் உதவி செய்யவோ நன்மையான காரியங்களைச் செய்யவோ முடியாது. மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றாலே அது நமக்கு மிகவும் கடினமானதாகவும், அதை ஏற்றுக் கொள்ளக் கூட நம் நமது முன்வராது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் அன்பு நமக்குள் வரும்போது, மற்றவர்களுக்கு நன்மையையே செய்ய தீர்மானிப்போம். முழுமனதோடு அவர்களுக்கு உதவி செய்யவும், எல்லாக் காரியங்களையும், துணிவோடு முன்வந்து அவர்களுக்கு செய்து கொடுப்போம். நாம் மற்றவர்களிடம்



எதிர்பார்ப்பதை நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டும் என்பது இயேசு கிறிஸ்துவின் கட்டளை. அதற்கு நாம் கீழ்ப்படிந்து நடக்க நம்மை ஒப்புக் கொடுப்போம்.

*உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.*

*- லூக்கா : 6 : 36*

மற்றவர்கள் நம்மிடம், இரக்கமுள்ளவர்களாக, அன்புள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். நாம் மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் அந்த இரக்கத்தை, அன்பை, தயவை நாம் மற்றவர்களிடம் காண்பிக்க வேண்டும். மற்றவர்கள் நம்மிடம் கடுமையாக நடந்து கொள்ளும்போதும், அன்பற்ற இரக்கமில்லாத வார்த்தைகளை நம்மிடம் பேசும்போதும், நம் மனது எவ்வளவு வேதனைப்படுகிறது. மற்றவர்கள் நம்மை விசாரிக்கவில்லையென்றால், நாம் அன்புக்காக எவ்வளவு ஏங்குகிறோம். அதை நாம் நினைத்துப் பார்த்து, மற்றவர்களை நாம் விசாரிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் கஷ்டப்படும்போதும், மன வேதனையோடு இருக்கும்போதும், யாராவது நமக்கு ஆறுதலாக பேசமாட்டார்களா என்று ஏங்குகிறோம். நாம் தேவையோடு இருக்கும்போது, யாராவது நம் தேவைகளை சந்திப்பதில் உதவமாட்டார்களா என்று நினைக்கிறோம். நாம் வியாதியோடு இருக்கும்போது, நம்மை விசாரிக்க யாருமே இல்லை என்று வேதனைப்படுகிறோம். மற்றவர்களுடைய கஷ்டத்திலும், சந்தோஷத்திலும் நாம் அவர்களை விசாரிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் வேலை பார்க்கும் இடத்தில், எல்லோரும் நம்மிடத்தில் நல்லபடியாக நடந்து கொள்ள வேண்டும் என்றும், நியாயமான கூலி கிடைக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம். நம்மை யாராவது அசட்டை பண்ணும்போதும், அற்பமாய் நம்மை நடத்தும்போதும் நம் மனது மிகவும் வேதனைப்படுகிறது. மற்றவர்களோடு பேசும் போதும், பழகும்போதும் எப்பொழுதும் நாம் மற்றவர்களுடைய மனதை புண்படுத்திவிடக்கூடாது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். நம்மைப்போல பிறரை எப்படி நேசிப்பது என்பதை இப்படியாக கர்த்தர் கற்றுத்தருகிறார்.

நம்மிடம் அன்பில்லை என்றால் மற்றவர்களை நாம் நேசிக்க முடியாது. மற்றவர்களிடம் உள்ள நல்ல காரியங்களை இந்த அன்பில்லாத



தன்மை காணவிடாமல் மறைத்து, கெட்ட காரியங்களை மட்டுமே காண வைத்து குறைகளை மட்டுமே சொல்ல வைக்கும். மற்றவர்களைக் குறித்து, அவர்கள் இல்லாதபோது தீமையானவற்றை பேசக்கூடாது. நம்மை மற்றவர்கள் இப்படியாகப் பேசுவதை நாம் விரும்புவதில்லை. ஆதலால் மற்றவர்களைக் குறித்து பேசும்போது, அவர்களுடைய நல்ல குணங்களைக் குறித்தே பேசுவோம். அன்பு நம்மிடம் இல்லாததினால் மற்றவர்களிடம் பொறாமை கொண்டு, தீமையாக பேசுகிறோம். அன்புக்குப் பொறாமையில்லை ( 1 கொரிந்தியர் 13 : 4).

சுயநலமுள்ளவர்கள் மற்றவர்களை தன்னைப்போல நேசிக்க-மாட்டார்கள். மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய உதவியை செய்யாமல், மற்றவர்களைக் கஷ்டப்படுத்தி, தாங்கள் நன்றாக இருப்பார்கள். மற்றவர்களை வருத்தப்படுத்துகிறோம் என்ற எண்ணமே அவர்களுக்கு இருக்காது. அவர்களது எண்ணம் எல்லாமே தாங்கள் மாத்திரம் சந்தோஷமாக வசதியாக இருக்க வேண்டும் என்பதே. நன்கு படித்தவர்களும், உலக ஞானத்திலும் அறிவிலும் சிறந்து விளங்குபவர்களும்கூட சுயநலமுள்ளவர்களாக அன்பில்லாமல் நடந்து கொள்கிறார்கள். தாங்கள் மட்டும்தான் அறிவில் சிறந்தவர்கள் என்றும், மற்றவர்களை அசட்டைபண்ணி, அற்பமாக நினைத்து, மனதை வேதனைப்படுத்தும்படியாகப் பேசுகிறார்கள். இவையெல்லாம் தன்னைப்போல பிறனையும் நேசிக்காததினால் வருபவையே. அன்பில்லாததினால் இப்படிப்பே-சுகிறார்கள். அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது (ரோமர்13:10). அன்புள்ளவர்கள் தங்கள் சொல்லாலும், செயலாலும் மற்றவர்களை வேதனைப்படுத்தமாட்டார்கள். மற்ற மனிதர்களோடு கூட நாம் நல்ல உறவில் இருக்கும்படியாகவும், மற்றவர்களின் உணர்வுகளையும் புரிந்து செயல்படும்படியாகவும் இருக்க இயேசு கிறிஸ்து விரும்புகிறார்.

நாம் கடையில் பொருட்களை வாங்கும்போது, அங்கு வேலை பார்க்கிறவர்களிடம் நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம்? ஒரு பொருளை காண்பிக்கச் சொல்லும்போது, அதிகாரத்தோடு சொல்லாமல், அன்போடு சொல்ல வேண்டும். அவர்களும் நம்மைப்போல ஆண்டவரால் உண்டாக்கப்பட்டவர்கள்தான். இன்னும் சொல்லப்போனால் குடும்ப கஷ்டத்தினிமித்தம் ஊர்விட்டு ஊர் வந்து வேலைபார்ப்பவர்கள்தான். அவர்களுடைய சூழ்நிலையை நினைத்துப் பார்த்தோமானால் நாம் கடுமையாக நடந்து கொள்ள மாட்டோம். இரக்கம் பாராட்டுவோம்.



இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள். நாம் அன்பாய் இருப்பதை கிரியையினால் வெளிப்படுத்த வேண்டும்.

நீங்கள் படிக்கும் மாணவர்களாக இருந்தால், நீங்கள் நன்றாக படிப்பது முக்கியம். அதே சமயத்தில் உங்களோடுகூட படிப்பவர்கள் உங்களிடம் தாங்கள் படிக்கும் பாடங்களில் சந்தேகங்களை உங்களிடத்தில் கேட்கும்போது, அவர்கள் மீது எரிச்சல் படாதீர்கள். உங்களது நேரத்தை வீணாக்குகிறார்கள் என்று நினைக்காதீர்கள். நீங்கள் அப்படிப்பட்ட ஒரு நிலைமையிலிருந்தால் மற்றவர்களிடத்தில் உதவி எதிர்பார்ப்பீர்களல்லவா? அவர்களுக்கு அன்போடுகூட உதவுங்கள்.

நமக்கு சொந்தமான பொருட்களையோ, உடைமைகளையோ, பணத்தையோ மற்றவர்கள் எடுத்துக் கொள்ள நாம் விரும்பமாட்டோம். அதுபோல நாமும் மற்றவர்களுக்கு சொந்தமானதை எடுத்துக் கொள்ளவோ, விரும்பவோ கூடாது. மற்றவர்கள் நம்மேல் தேவையில்லாமல் அதிகாரம் செலுத்துவதையும், தேவைக்கும் அதிகமாக வேலை வாங்குவதையும் நாம் விரும்புவதில்லை. ஆதலால் நாமும் மற்றவர்கள் மேல் அதிகாரம் செலுத்தக் கூடாது. மற்றவர்களை தேவைக்கும் அதிகமாக வேலை வாங்கக் கூடாது; கொடுமைப்படுத்தக்கூடாது. நமக்கு கீழே வேலைபார்ப்பவர்களிடம், நாம் அவர்களுடைய இடத்தில் இருந்து, அவர்களுடைய கஷ்டங்களை, வேதனைகளை உணர்ந்து, அன்போடு அவர்களை நடத்த வேண்டும். மற்றவர்கள் நம் வீட்டிற்கு வரும்போது, நம் வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ளாதபோது, நமக்கு அது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் நாமும் மற்றவர்களுடைய வீட்டிற்கு செல்லும்போது, நம் வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்வதுபோல அவர்கள் வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

## தேவனிடத்தில் எப்படி அன்பு செலுத்துவது?

நாம் தேவனிடத்தில் அன்பு செலுத்துவது என்பது, இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்று, அவருடைய வழி நடத்துதலின்படி வாழ வேண்டும். மற்றவர்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் அன்பை எடுத்துச் சொல்லி அவர்களை இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்தி, மற்ற மனிதர்களையும் நம்மைப்போல் நேசித்து அவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும்; மற்றவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்; தேவையில் இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஒருவன்

தேவனிடத்தில் அன்பு செலுத்துகிறேன் என்று சொல்லிக்கொண்டு, தான் காண்கின்ற சகோதரனை நேசிக்காமல் வெறுத்தால் அவன் பொய்யன் ஆகிறான். அவன் காணாத தேவனித்தில் ஒருபோதும் அன்பு கூர முடியாது (1 யோவான் 40 : 20,21). பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூறுகிறான் (1 யோவான் 5:1) . இயேசுவே கிறிஸ்து என நம்புகிற யாவரும் தேவனின் பிள்ளைகளாயி-ருக்கிறார்கள். தேவனை நேசிக்கிற மனிதன், தேவனின் பிள்ளைகளையும் நேசிக்கிறான். தேவனுடைய பிள்ளைகள் மீது கோபமோ, கசப்போ இருக்கக்கூடாது. அவர்களுக்கு எதிராக சிந்திக்கவோ, பேசுவதோ, செயல்படவோ கூடாது. அப்படி நாம் அவர்களுக்கு எதிராக செயல்பட்டால், தேவனுக்கு எதிர்த்து நிற்பவர்களாகக் காணப்படுவோம். ஆகையால் அவர்களை எதிர்த்து நிற்காமல் அவர்களை நேசிப்போம். தேவனிடத்தில் முழுமையாக அன்பு கூர்ந்தோமென்றால் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து மற்றவர்களிடம் அன்போடு நடந்து கொள்வோம்.

நியாய சாஸ்திரி ஒருவன் இயேசுவிடம், நித்திய ஜீவனை (நித்தியவாழ்வைப்) பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று இயேசு கிறிஸ்து கேட்டதற்கு அவன்,

> ***உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்.***
>
> *- லூக்கா 10 : 27*

இயேசுகிறிஸ்து அவனிடம், இந்த கட்டளைக்கு கீழ்படிந்தால் நித்திய ஜீவனைப் பெறுவாய் என்றார். அந்த மனிதன் தான் வாழ்ந்து வந்த முறையே சரியானது என்று நிரூபிக்க விரும்பி, இயேசுவிடம் “நான் நேசிக்க வேண்டிய பிற மக்கள் யார்? என்று கேட்டான். அதற்கு இயேசு, ஒரு மனிதன், எருசலேமிலிருந்து எரிகோவிற்குப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, சில திருடர்கள், அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு, அவனைக் காயப்படுத்தி, இறக்கும் தருவாயில் விட்டுச் சென்றனர். ஒரு ஆசாரியன் அந்த வழியாய் வந்தபோது, அந்த மனிதனைக் கண்டும் உதவி செய்யாமல் விலகிச் சென்றான். அடுத்ததாக ஒரு லேவியனும், அவனைக் கண்டு, உதவி செய்யாமல் விலகிச் சென்றான். பின் அந்த வழியே ஒரு சமாரியன் வந்தான்.



அவன் அந்த மனிதனைக் கண்டு மனதுருகி, அவன் அருகே சென்று அவன் காயங்களைக் கட்டி, தன்வாகனத்தில் ஏற்றி, சத்திரத்தில் வைத்து பராமரித்து, மறுநாள் கிளம்பும்போது, இரண்டு வெள்ளிக்காசை சத்திரத்திலுள்ள மனிதனிடம் கொடுத்து, அவனை கவனித்துக் கொள்ளும்படி கூறி, மேலும் அதிகச் செலவானால் நான் திரும்ப வரும்போது, அதை உனக்குக் கொடுப்பேன் என்றான். இயேசு கிறிஸ்து நியாயசாஸ்திரியிடம், இந்த மூன்று பேரில் காயமுற்ற மனிதனுக்கு அன்பு காட்டினவன் யார்? என்று கேட்டார். அதற்கு அவன் “அவனுக்கு உதவியவனே” என்றான். இயேசு அவனிடம் நீயும் சென்று பிறனுக்கு அவ்வாறே செய் என்றார்.

பாருங்கள் வேதத்தை நன்கு கற்றறிந்த ஆசாரியனும், லேவியனும் காயம்பட்டவனுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. யூதர்களால் ஒதுக்கப்பட்ட சமாரியன்தான் காயப்பட்டவனுக்கு உதவி செய்தான். தனது நேரத்தையும், பணத்தையும் பொருட்படுத்தாமல் தியாகம் செய்தான். பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் (மத்தேயு 12:7). நாமும் மிகவும் கஷ்டப்படுகிற ஜனங்களுக்கும், தேவையில் இருப்பவர்களுக்கும், மனமிரங்கி, அன்போடு கூட உதவி செய்ய வேண்டும்.

## நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றும் அன்பு

> ***உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்.***
>
> *- கலாத்தியர் 5 : 14*

மனுஷர்களாகிய நாம் இந்த பூமியிலே எப்படி, ஒருவருக்கொருவர் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே தேவன், அன்பின் பிரமாணத்தை வைத்திருக்கிறார். நாம் புறம்பான மனுஷனில் செய்ய வேண்டிய

நடத்தைகளுக்காகவே நியாயப்பிரமாணத்தை தந்தார். நியாயப்பிரமாணம் புறம்பான மனுஷனுக்கானது. அதை நடைமுறைப்படுத்துவது என்பது, லேசான காரியமல்ல. பத்துகட்டளைகளுள்ள நியாயப்பிரமாணத்தில் ஒரு கட்டளையை மீறினாலும் மொத்த நியாயப்பிரமாணத்தையும் மீறினவர்களாகக் காணப்படுவோம். ஆனால் நாம் அன்போடுகூட ஒருவருக்கொருவர் நடந்து கொண்டோமானால், நியாயப்பிரமாணத்தின் பத்து கட்டளைகளையும் முழுமையாக, பரிபூரணமாக நிறைவேற்றினவர்களாகக் காணப்படுவோம். அது எப்படியெனில், களவு செய்யாதே என்ற கட்டளையை எடுத்துக் கொண்டோமானால், மற்றவர்களை நம்மைப்போல நேசித்தோமானால் நிச்சயமாக அவர்களுடைய பொருளை நாம் திருடமாட்டோம். அப்படியேதான் அன்பு நம்மை முழு நியாயப்பிரமாணத்தையும் நிறைவேற்றுகிறவர்களாக தகுதிப்படுத்தும். அன்பு நம்மை பூரணப்படுத்தும்.

## பூரணமான அன்பு

நாம் ஒருவரிடத்தில் அன்பு செலுத்தினால் அவர்களை நேசிப்போமேயொழிய அவர்களுக்கு பயப்படமாட்டோம் (1 யோவான் 4 : 18). அவர்கள், நம்மிடம் எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசினாலும், எப்படி நடந்து கொண்டாலும் அது நம்மை பாதிக்காது. இது அவர்களால் அல்ல, நாம் அவர்களை நேசிப்பதினாலேயே. அவர்களுடைய வார்த்தையோ, நடத்தையோ நம்மை புண்படுத்துவதாக இருந்தாலும் நாம் அவர்களிடத்தில் அன்பு செலுத்துவதினால், அந்த அன்பு அவர்களுடைய குற்றங்களை நம்மை மன்னிக்க வைக்கிறது. அன்பிற்காகத்தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலனாகிய பேதுருவிடம், ஒருவன் உனக்கு எதிராக பாவம் செய்தால், அவனை ஏழுதரம் அல்ல, ஏழெழுபது தரம் மன்னிக்கும்படி கூறுகிறார். மன்னித்தல் என்பது, அன்பின் மறுபக்கம். ஆகையால் எப்போதும் நமக்கு எதிராக நிற்பவர்களை நாம் மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் அவர்களை மன்னிக்கும்போது, அவர்கள்மீது நம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறோம். இதையே வேதாகமம் இப்படியாகச் சொல்லுகிறது. சகோதரர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் தப்பிதங்களை மன்னியாத நிலையில் நமது காணிக்கைகளை ஆலயத்துக்கு கொண்டு வராதே என்று சொல்லுகிறது. நமது காணிக்கைகளை கர்த்தர் அங்கீகரிக்க வேண்டுமென்றால் யார் மீதாவது நமக்கு கசப்பு இருந்ததென்றால், அவர்களை நாம் முதலாவது மன்னிக்க வேண்டும். பின்பு காணிக்கைகளை கர்த்தரிடத்தில் கொண்டுவர வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அடிக்கப்பட்டு, நிந்திக்கப்பட்டு, காயப்பட்டு, அதிக வேதனையோடு கூட இரத்தம் சிந்த சிலுவையில்



தொங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்திலும் கூட தம்மை அப்படி துன்பப்படுகிறவர்களை, பிதாவே இவர்களை மன்னியும் என்று மன்னிக்கச் சொல்லி ஜெபிக்கிறார். அன்பின் உச்சக்கட்டம் என்பது, இதிலிருந்து விளங்குகிறது. இன்று இயேசுகிறிஸ்துவை நேசிக்காதவர்கள் உலகத்தில் யாரும் இல்லை. இது எதனால்? இயேசு கிறிஸ்துவின் இந்த மாசற்ற, ஒப்பற்ற அன்பே.

நாம் ஒருவரை மன்னியாதிருப்போமானால் நமது இருதயம் பாரப்பட்டு இருக்கும். இது எதனால் என்றால் நமது மனசாட்சி, நம்மிடம் அந்த மன்னியாத தன்மையை சுட்டிக்காட்டிக்கொண்டே இருக்கும். நாம் அமைதியாகவோ, சமாதானமாகவோ இருக்க முடியாது. நமது மனசாட்சி நம்மை குற்றப்படுத்தாதிருக்கும்போதே நாம் சமாதானமாக இருக்க முடியும். நாம் ஒருவரை மன்னிக்கும்போது, சமாதானத்தை பெறுகிறோம். அப்படியென்றால் அன்பே இந்த சமாதானத்தை நமக்கு பெற்றுத் தருகிறது. வேதம் முழுவதையும் பார்த்தோமென்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, பேதுரு, பவுல், ஸ்தேவான் இவர்களெல்லோரும் தங்களை எதிர்த்து நிற்பவர்களையும் நேசிக்கிறவர்களாக இருந்தார்கள். இவற்றையெல்லாம் வேதாகமத்தில் கர்த்தர் எழுதிக் கொடுத்திருப்பதன் நோக்கம் நாம் அப்படிப்பட்ட அன்புள்ளவர்களாக நடக்க வேண்டும் என்பதே. இயேசு கிறிஸ்துவைப் போல நம் ஒரு கன்னத்தில் அடிக்கிறவருக்கும் மறுகன்னத்தை காண்பிக்கிறவராக இருந்தோமென்றால் இயேசுவை நம்மில் இந்த உலகம் காணும்.

## பகைக்கிறவர்களை நேசிக்கும் அன்பு

நம்மை நேசிக்கிறவர்களை அல்ல, நம்மை பகைக்கிறவர்களையும் நேசிக்கும் அன்பு நமக்கு வர வேண்டும். இயேசு கிறிஸ்துவைப் பாருங்கள்



தன்னைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்தை சிநேகிதனே என்று அழைத்தார். இயேசு கிறிஸ்துவிலுள்ள அந்த அன்பு நமக்குள் வரவேண்டும். நம்மை நேசிக்கிறவர்களையே நாம் நேசிப்பது என்பது சாதாரணமான அன்பு. இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களும் தன்னை நேசிக்கிறவர்களை நேசிக்கிறார்கள். நம்மை மற்றவர்கள் தவறாக நடத்தினாலும், தீமையான காரியங்களை நமக்கு

எதிராக செய்தாலும், நமக்கு தீமை செய்தவர்களிடம் அன்பு செலுத்தி தீமையை மேற்கொள்ள வேண்டும். ஸ்தேவான் தன்னைக் கல்லெறிந்து கொன்ற ஜனங்களை மனதார மன்னித்து, அவர்களின் பாவத்தை மன்னிக்கும்படி பிதாவை நோக்கி ஜெபித்தார். இயேசு கிறிஸ்து, தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னிக்கும்படி பிதாவை நோக்கி ஜெபித்தார்.

> *நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் ; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் ; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் ; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காவும், ஜெபம் பண்ணுங்கள்.*
>
> *- மத்தேயு 5 : 44*

## பரிசுத்தமான அன்பு

நாம் ஒவ்வொருவரும் பரிசுத்தமாக வாழ நம் தேவன் விரும்புகிறார். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் (லேவியராகமம் 19:2) என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் நல்ல காரியங்களை செய்வதினால் பரிசுத்தமாக முடியாது. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய இரத்தத்தினால் நம் பாவங்கள் கழுவப்பட்டு, அனுதினமும் அவரைப் பற்றி அறிகிற அறிவில் வளர்ந்து, அவரைப்போல ஒரு வாழ்க்கை வாழும்போது, நம் வாழ்க்கையில் ஒரு மாறுதல் காணப்படும். அவரைப்போல நாம் மாறுவோம். ஏனென்றால் ஆவியானவரால் (தேவ அன்பினால், ரோமர் 5:5) தொடர்ந்து நாம் நடத்தப்படுவதால் மகிமையின் மேல்



மகிமையடைந்து மேன்மேலும் கிறிஸ்துவைப் போல மாற்றப்படுகிறோம். அப்பொழுது நாம் இயேசுவையே பார்ப்போம். இயேசுவைப்போல சிந்திப்போம். அவரை இன்னும் அறிந்து கொள்ள வாஞ்சிப்போம். அவரைப் பின்பற்றி அவரைப் போல ஒரு வாழ்க்கை வாழ்வோம். இதுவே



உண்மையான பரிசுத்தம். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் (மத்தேயு 5:8). இன்னும் அவரை நெருங்கிகிட்ட சேரவேண்டும். பரிசுத்த ஜீவியத்தில் முழுமையாக தொடர்ந்து நிலைத்திருந்து, அவருடைய பிள்ளைகளாக நாம் வாழ வேண்டும். முழுமையான பரிசுத்த ஜீவியத்தை உடையவர்கள், தங்கள் சொந்த தேவைகளைக் குறித்து கவலைப்பட மாட்டார்கள். தேவனுடைய இருதயத்தின் வாஞ்சையை நிறைவேற்றிடவும், அவருடைய ஸ்தானாதிபதிகளாக, அவருடைய சித்தம் நிறைவேற செயல்படுவர். அப்படிப்பட்டவர்களிடத்திலே மாசில்லாத பரிசுத்தமான அன்பு காணப்படும். இப்படிப்பட்ட அன்புள்ளவர்கள் ஏழை, எளிய ஜனங்களுக்கு, அந்த பரிசுத்த அன்பின் நிமித்தம் கொடுப்பவர்களாக இருப்பார்கள். இதுவே மாசில்லாத சுத்தபக்தி என்று கர்த்தர் சொல்லுகிறார் (யாக்கோபு 1 : 27).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பு நம்மை நிரப்புவதாக. அவர் நம்மை நேசிப்பதுபோல மற்றவர்களையும் நாம் நேசிப்போமாக. ஆமென்!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிக்கை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா ரூ. 200/-

வெளிநாட்டு வருட சந்தா ரூ. 2000/-

*S. PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD / M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.*

*ICICI* வங்கி கணக்கின் பெயர் : *S. PAULRAJ KENNEDY*

*ICICI* வங்கி கணக்கு எண் : 0350 0150 7744

***எங்களது முகவரி***

எஸ். பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு. இந்தியா.



இந்த பத்திரிக்கையை நீங்கள் படித்துவிட்டு மற்றவர்களுக்கும் படிக்கக் கொடுங்கள். எங்களுக்காகவும், எங்களுடைய ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பிரசன்னமும் எப்போதும் உங்களோடு இருப்பதாக!

*உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்*

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

*இணையதளம் :* **www.kennedyministries.org**




www.mac-hammond.org

- ஒருவரை வேலைக்கு எடுக்கும்போது, அவர்களுடைய முழு குடும்பத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்களுடைய குடும்பம் சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் இருந்தால்தான், அவர்கள் முழுமையாக நமக்கு வேலை பார்க்க முடியும்.
- ஒரு வியாபாரம் நன்றாக நடப்பது என்பது, வைத்திருக்கும் சிறந்த பொருட்களையோ அல்லது அவற்றின் குறைந்த விலையை வைத்தோ அல்ல. ஒரு வியாபாரத்தின் வெற்றி என்பது வாடிக்கையாளர்களுடன் உள்ள உறவு நிலையே. உங்களது வாடிக்கையாளர்களை நண்பராக்குங்கள். அதுவே வெற்றியைத் தரும்.
- எதையும், விசேஷமாக கசப்பான விஷயத்தை, அதன் மீது இனிப்பைத் தடவிப் பேசாதீர்கள். நேரிடையாகப் பேசுங்கள். இயேசு கிறிஸ்து தமது சீடர்களிடம், வரப்போகும் கஷ்டமான நாட்களைக் குறித்துப் பேசுகிறார். அவர்கள் அவரை பின்பற்றுவது என்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை விவரித்துப் பேசுகிறார். இயற்கைக்கு அப்பாற்பட்டவிதத்தில் எதிர்பார்த்திருப்பது என்பது எப்படி அவர்களை பாதிக்கும் என்பதை அறிந்திருந்தார்.
- எப்பொழுதும் கர்த்தருக்கும், மற்ற மனிதர்களுக்கும் நன்றி சொல்ல மறவாதிருங்கள்.
- நீங்கள் பார்க்கின்ற வேலையில் உங்களுக்கு சந்தோஷம் இல்லையா? இந்த வேலையை விட்டுவிட்டு வேறு வேலைக்கு செல்வது என்பது சுலபமான காரியம்தான். அந்த வேலை உங்களுக்கு சந்தோஷம் தரவில்லையென்றால் என்ன செய்வீர்கள்? அதை இப்போதே யோசியுங்கள். உங்களது சந்தோஷம் வெளி உலகத்தை வைத்து அல்ல. அது உங்களுக்குள்ளிருந்து வருவதுதான். சந்தோஷமாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அது முடியாததுபோல இருக்கும். ஆனால், அது



சாத்தியமே.

- நம்மை யாராவது குறைகூறும்போது அது நமக்கு மிகவும் வேதனையைத் தரும். முக்கியமாக நாம் வேலைபார்க்குமிடத்தில் நமக்கு மேலே இருக்கும் அதிகாரிகள் நம்மை குற்றப்படுத்தும்போது, அந்த வேதனை இரட்டிப்பாக இருக்கும். அதை உங்களுக்கு சாதகமாக பயன்படுத்தப் பழகுங்கள். உங்களை நீங்களே ஆராய்ந்து பார்த்து, உங்கள் குறைகளை நீக்கி, உயரப் பழகிக் கொள்ளுங்கள். அடுத்தமுறை யாராவது உங்களை விமர்சனம் செய்யும்போது எதிர்த்துப் பேசாமல், அதை உங்களது உயர்வுக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- நீங்கள் வேலைபார்க்கும் இடத்தில் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்றால், புறங்கூறுதலுக்கு இடம் கொடுக்காதீர்கள். புறங்கூறுதலில் ஈடுபடாதீர்கள். அது உங்களுக்கு மரியாதையையும், நம்பிக்கையையும் தேடித் தரும்.
- நேரம் என்பது மிகவும் முக்கியம். நாம் நேரத்தை சரியாக நிர்வகிக்க-வில்லையென்றால் நிர்வகிக்க எதுவுமே இல்லாததொரு நிலைமை வந்துவிடும். சென்றுபோன எந்த நிமிடமும் மறுபடி வராது. நேரத்தை சரியாக, சிறப்பாகப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.
- உங்களது வாழ்க்கை வெற்றி வாழ்க்கையாக இல்லாதிருந்தால் உங்களை சோதித்துப் பாருங்கள். மற்றவர்களுக்கு உதவி செய்கிறீர்களா? எப்படிப்பட்ட இருதயத்தோடு உதவி செய்கிறீர்கள்? மற்றவர்களின் தேவைகளை அதிகமாக நீங்கள் சந்திக்க, சந்திக்க உங்களது வாழ்க்கை வெற்றி பெறும்.
- நீங்கள் வாழ்க்கையில் உயரவேண்டுமென்றால், வாழ்க்கையின் சவால்களைத் தைரியமாக சந்திக்கத் தயாராகுங்கள். அப்படிப்பட்ட வர்களையே அதிகாரங்கள் தேடி வரும்.
- நாம் முன்னேறுவதற்கான எல்லைகளை வகுப்பது நல்லது. ஆனால் அதைக்காட்டிலும் அதை அடைய வேண்டும் என்ற வாஞ்சை நமக்குள் இருப்பது அவசியம்.
- உங்களைக்குறித்து தரிசனம் உண்டா? அது அவசியம். உங்களது வாழ்க்கையின் வெற்றிக்கும் அதை அடைவதற்கும் தரிசனம் முக்கியம். வாழ்க்கையில் பின்னாட்களில் செய்ய வேண்டியக் காரியங்களை முன்கூட்டியே தீர்மானிக்க உதவுவதே தரிசனம். அந்தத் தரிசனத்தை அடைய திட்டமிடுங்கள்.

# கேட்கிறதைக் கவனியுங்கள் (6)



***நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் ; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.***

***விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள் ; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.***

***இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.***

*- மத்தேயு 5 : 14- 16*

கர்த்தருடைய வார்த்தையை நாம் இரவும் பகலும் தியானிக்க, தியானிக்க அவரது சிந்தையை, சித்தத்தை நாம் அறிந்துகொள்வோம். அவருக்குப் பிரியமானது என்ன, பிரியமில்லாதது என்ன, எவற்றை நேசிக்கிறார், எவற்றை வெறுக்கிறார் என்பதையெல்லாம் நாம் தெரிந்து கொள்கிறோம். நாமும் அவரைப்போல நடக்க ஆரம்பிக்கிறோம். கர்த்தர் எப்படி ஒவ்வொரு மனிதனையும், ஒவ்வொரு சூழ்நிலையையும் பார்க்கிறாரோ, அதேபோல நாமும் பார்க்கப் பழகுவோம். அதற்கான அடையாளம், மற்றவர்களையும் நம்மைப்போல நேசிக்க ஆரம்பிப்போம். நம் பேச்சு, நடத்தை எல்லாமே இயேசுவின் அன்பை வெளிப்படுத்தும். மற்றவர்களுக்கு ஆறுதல் செய்பவர்களாக, உதவி செய்பவர்களாக மாற ஆரம்பிப்போம். நமக்குள் ஒரு சமாதானம் காணப்படும். 2000 ஆண்டுகளுக்கு முன்பாக தேவன், இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமியிலே எப்படி வாழ்ந்து காண்பித்தாரோ, அதே வாழ்க்கையை வாழ்வோம். மற்றவர்களுக்கு முன்மாதிரியான வாழ்க்கை. இந்த உலகத்திலுள்ள ஜனங்களுக்கு நம்மையே கர்த்தர், தம்மை வெளிப்படுத்தும் நிருபமாக வைத்திருக்கிறார். இதையே, உன்னைக் காண்பவன், என்னைக் காண்பான் என்கிறார். வேதத்தை நாம் படிக்கும்பொழுது, அந்த வார்த்தை மூலமாக நமக்குள், அவருடைய அன்பு, ஞானம், விவேகம், அறிவு, புத்தி, நிதானம், பரிசுத்தம், நீடிய பொறுமை, ஆறுதல், விசுவாசம் இவற்றையெல்லாம் கர்த்தர் தருகிறார். அதனால் நமக்குள் ஒரு பெரிய வெளிச்சம் உண்டாகிறது. இப்படிப்பட்ட வெளிச்சம் உள்ள நம்மை யாராலும் மறைத்துவைக்க முடியாது. நாம் சொல்வதை யாராலும் மறுக்கவும் முடியாது.

அதையே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, வெளிச்சம் கொடுப்பதற்காக உள்ள விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக்கமாட்டார்கள் என்றும் அதை விளக்குத்தண்டின்மேல் வைப்பார்கள், அப்பொழுது வீடு முழுவதற்கும் (நமது குடும்பத்திலுள்ளவர்களுக்கு) வெளிச்சம் (முன்மாதிரியான பேச்சு, நடத்தை) கொடுக்கும் என்றார். மலைமேல் இருக்கிற பட்டணம் என்று கர்த்தர் குறிப்பிடுவது, மற்ற உலக ஜனங்களுக்கு என்பதாகும். நாம் கர்த்தருடைய வார்த்தை தருகிற வெளிச்சத்தின்படி நடக்கும்போது, நம்முடைய அந்த நல்ல நடத்தையைப் பார்க்கும்போது, மற்ற ஜனங்கள் கிறிஸ்துவை நம்மில் காண்பார்கள். இயேசு கிறிஸ்துவினாலேயே, அவரை இவர்கள் தங்கள் தெய்வமாகத் தொழுதுகொண்டு, அவர் சொன்னபடியே நடப்பதினாலேயே இவர்கள் பேச்சும், நடத்தையும் நல்லவைகளாக இருக்கின்றது என்பார்கள். இதுவே கர்த்தருக்கு மகிமை செலுத்துவதாகும். ஆம், எனக்குப் பிரியமானவர்களே, அவரைப்போல நாம் இருப்பதே அவருக்கு மகிமையாகும். இவையெல்லாம் உருவாவதற்கு காரணம், வேதத்தின் வார்த்தையே. அதனால் வார்த்தையைப் புசியுங்கள். இந்த வேதத்தின் வார்த்தை நம்மை தகுதிப்படுத்தும், உருவாக்கும்.

***வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,***

***அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன- முள்ளவைகளாயிருக்கிறது.***

*- 2 தீமோத்தேயு 3 : 16-17*

அப்போஸ்தலனாகிய பவுல் வேதத்தின் வார்த்தைகளெல்லாம், தேவனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வந்த வார்த்தைகள் என்று குறிப்பிடுகிறான். நம்மை உருவாக்குகிற வார்த்தைகள் என்கிறான். யோசனை, ஆலோசனை தரும் வார்த்தைகள் என்றும், துன்மார்க்கத்திலிருந்து நீதியின் பாதைக்கு வழி காட்டும் வார்த்தைகள் என்றும் குறிப்பிடுகிறான். வேதத்தை வாசியுங்கள். அதன்படி வாழுங்கள். நீங்களே இந்த உலகத்துக்கு வெளிச்சம்.

***- தொடரும்***